HNB GRAMEEN
# மெஹெவர
இருள் நீக்கும் உன்னத பணி
2018 ஏப்ரல் – மே இதழ்




# IQ Master - Season 2 இன் வெற்றியாளர் கசுன் புத்திகவுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்...

# பாலைவனப் பூக்கள்



## வாழ்க்கையின் அர்த்தம்



சோமாலியா என்பது ஒரு வரிய நாடாகும். அதிக துன்பங்கள் குறைவான கல்வி அறிவு கொண்ட ஒரு நாடாகும். கிட்டத்தட்ட பதினொரு கோடிக்கு மேல் ஜனத்தொகை கையை கொண்டிருந் தாலும், ஒரு மனிதனின் ஆயுட்காலம் 55 ஆகும். சோமாலியாவில் 1965 ஆம் ஆண்டு கல்காயோ எனும் ஊரில் ஒரு கருப்பினப் பெண் பிறந்தார். இந்த குடும்பமும் மற்றைய குடும்பங்கள் போலவே மிகவும் கஷ்டப்பட்ட ஒரு குடும்பமாகும். அவளின் பெயர் வாரிஸ் டெயிரி. அவர் சிறிய பராயத்தில் மிகுந்த கஷ்டத்துடனும், குறை கல்வி அறிவை பெற்று மிகவும் கஷ்டமாக ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார். அதேவேளை அவரின் 13 ஆவது வயதில் அவரின் தந்தை ஒருவருக்கு அவரை திருமணம் முடித்து வைக்க முடிவு செய்தார்.

ஆனால் அந்த முடிவு வாரிஸிற்கு பிடிக்கவே இல்லை என்ன தான் அடம் பிடித்தாலும் தந்தையின் முடிவில் மாற்றம் ஏதும் இல்லை. தாய் இந்த முடிவிற்கு எதிராக இருந்தாலும் தந்தை மீது கொண்ட பயத்தால் அவரின் பேச்சுக்கு எதிர் பேச்சு பேச முடியவில்லை. இறுதியில் இவரின் முடிவாக இருந்தது வீட்டை விட்டுச்செல்வதேயாகும். இவர் இது தொடர்பாக தனது தாயிடம் கூற இறுதியில் அவரும் அந்த முடிவிற்கு இணங்கினார்.

வாரிஸ் இறுதியாக மொகடிசுவிற்கு தப்பிச் செல்ல முடிவு செய்தார். அதற்கு காரணமாக இருந்தது அவரின் மாமி அங்கு வசித்தமையே ஆகும். ஆனால் அவர் இருக்கும் இடம் சரியாக வாரிஸ்க்கு தெரிந்திருக்கவில்லை. இரவில் ஒரு செருப்பு கூட அணியாமல் ஆயிரம் தடங்களை எடுத்து வைக்க வேண்டிய அந்த பயணத்தை அவர் சென்றார். அவரின் ஒரே நம்பிக்கையாக இருந்தது மாமியுடன் வசிப்பதேயாகும். ஏனெனின் செலவுக்கு கொஞ்சம் கூட பணமில்லாமல் அன்றைய பயணத்தையும் கவனமாக கடக்க வேண்டிய நிலையில் மோகடிசு எப்படி செல்வது என்பது பற்றி கூட சரியாக அறியவில்லை. வாரிஸ் பல இரவுகள், பல நாட்கள் ஓய்வின்றி தமது பயணத்தை மேற்கொண்டார். பசி, தாகம் அவரை வெகுவாக தாக்கிய போதும் ஒன்றுமே செய்ய முடியாமல் தனது பயணத்தை செல்ல வேண்டிய நிலை அவருக்கு. இவ்வாறு நடந்து செல்லும் போது, வாரிஸ் வாரிஸ் என தனது தந்தையின் குரலில் அழைப்பது போல கேட்டது. பயமடைந்த வாரிஸ், தந்தை அவரை கண்டு கொண்டால் நிச்சயம் அந்த வயதான மனிதனுக்கு தன்னை திருமணம் செய்து வைத்து விடுவார் எனும் அச்சத்திலேயே அவரிடம் இருந்து தப்பிக்க எண்ணி ஒரு இடத்தில் ஒழிந்து கொண்டார். இருப்பினும் தந்தை அவரின் பாத தடங்களை பின்தொடர்ந்து அவரிடம் வருவதாக உணர்ந்தார். இருப்பினும் விரைந்து முன்நோக்கி சென்றார். அதன் பின் அவருக்கு அந்த குரல் கேட்கவில்லை. இவ்வாறு பல நாட்கள் கடந்து கால்நடையாக தனது பயணத்தை தொடர்ந்த வாரிஸ், ஒரு இடத்தில் தனது பாதங்களை பார்க்கும் போது மிகுந்த காயங்களுடன் வேதனையாக இருந்தது. அந்த கலைப்பில் ஒரு மரத்தடியில் அமர்ந்து சற்று ஓய்வெடுக்கும் போது அவருக்கு ஒரு சத்தம் கேட்டது.



அவர் பார்க்கும் போது தம்முன் கர்ச்சினையுடன் ஒரு சிங்கம் நிற்பதை கண்டார். விரைவாக எழும்ப அவர் எத்தணித்த போதும் அவரின் கால்களில் ஏற்பட்டிருந்த வேதனையால் அது அவரால் முடியாமல் போனது. பல நாட்கள் போராடி பயணத்தின் முடிவை அடைந்த நமக்கு வாழ்க்கையின் முடிவிற்கு சென்றுவிட வருமோ எனும் பயம் எழுந்தது. ஒரு கட்டத்தில் அவர் சிங்கத்தை பார்த்து "என்னை இப்போது கொன்றுவிடு" எனும் உரத்துக்கூறி தனது கண்களை இருக்கமாக மூடிக்கொண்டார். சிங்கம் அவரின் அருகில் வந்து சற்று நேரம் நின்று விட்டு திரும்ப போய்விட்டது. கடவுளை நினைத்தப் படியே சிங்கம் அவ்வாறு செய்ய காரணமாக இருந்தது அவரது உடலில் தசை இல்லாததே காரணம் என அவர் நினைத்துக்கொண்டார்.

இறைவனுக்கு நன்றி கூறிவிட்டு தமது பயணத்தில் துணையாக நின்று வழிகாட்டுமாறு ஒரு கோரிக்கை விடுத்தார். இறுதியில் அவர் மோகடிசுவை அடைந்தார். இறுதியில் அவர் தமது சொந்தங்களை கண்டார். அங்கு சில நாட்கள் வாழ்ந்த அவருக்கு சிறிது பணம் கிடைத்தது. அந்த பணத்துடன் அவர் அங்கிருந்து வெளியேறினார். அவர் ஒரு முகாமையாளரை பார்த்து தமக்கு தொழில் தருமாறு வேண்டுகோள் விடுக்க, அதன்படி அவருக்கு ஒரு தொழில் கிடைத்தது. அவருக்கான ஊதியம் 60 டொலர்கள் வழங்கப்பட்டது. அந்த பணத்தை அவர் தனது அம்மாவுக்கு அனுப்பி வைத்தார். அதன் பின் அவர் தனது மாமியாரின் வீட்டையும் கண்டறிந்தார்.

வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டிருந்த மாமியாரின் கணவர் அன்றைய தினம் அங்கு வந்திருந்தார். கிழிந்த ஒரு ஆடையுடன் நின்று கொண்டிருந்த இவரை கண்ட மாமியின் கணவருக்கு அவர் மீது பெரும் கவலை ஏற்பட்டது. அவர் அந்த நேரம் லண்டனுக்கான சோமாலியாவின் தூதுவராக செயற்பட்டு வந்தார். அவரின் வீட்டு வேலைகளை செய்யக்கூடிய ஒருவர் தேவைப்பட்ட போது அதற்கு வாரிஸ் அதற்கு விருப்பம் தெரிவித்து லண்டனுக்கு சென்றதே அவரின் வாழ்வின் மாற்றத்திற்கு ஒரு முக்கியமான நிகழ்வாக அமைந்தது.


அவர் தூதுவர் காரியாலயத்தில் வேலையாளாக இணைந்து, சில நாளிலேயே அவரது மாமா ஓய்வு நிலை பெற்றார். அதனால் அவரது தொழிலும் அவரை விட்டு விலகியது. அதன் பின் அவர் மெக்டொனால்ட் நிறுவனத்தில் பணியாளராக இணைந்தார். அதேவேளையில் அவருக்கு புகைப்பட கலைஞர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் பிரதிபலனாக ஒரு கலண்டருக்கு அவரது புகைப்படத்தை பிரசுரிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதேவேளையில் விளம்பரப்படங்களிலும் நடிப்பதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைத்தது.




அத்துடன் அதே நிறுவனத்தால் திரைப்படங்களில் நடிப்பதற்கான அழைப்பும் அவருக்கு விடுக்கப்பட்டது. அதேவேளை அந்த திரைப்படத்திற்கு சிறந்த வரவேற்பு கிடைத்ததுடன் சிறந்த நடிகைக்கான விருதும் கிடைத்தது.

அதேபோல் அவர் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி தூதுவராகவும் தெரிவு செய்யப்பட்டார். அவர் தனது சுயசரிதையை "Desert Flower" எழுதி வெளியிட்டார். அந்த புத்தகம் அதிக வருமானத்தை ஈட்டிய ஒரு புத்தகமாக தனது சாதனையை படைத்தது.

இவ்வாறு அவர் தமது வாழ்க்கையில் பட்ட கஷ்டங்கள் பின் அடைந்த செல்வம் என ஏற்றதாழ்வுகள் வந்திருந்தாலும் அவரின் விடா முயற்சிகளே இதற்கு காரணமாக அமைந்தது. நாங்களும் எமது வாழ்வில் வெற்றி கொள்வதற்கு வாரிஸ் இன் வாழ்க்கையை முன் உதாரணமாக எடுத்து செயற்படுவது சிறந்ததாகும்.



# கிரிக்கெட் வீரர்கள் மீண்டும் MCA வெற்றிக்கிண்ணத்தை வென்றுள்ளனர்




விற்பனை சேவை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போட்டியில் இவ்வருடம் எங்கள் அணி பங்குபற்றியது கடந்த ஆண்டு தோல்வியுராத மற்றும் "C" பிரிவின் வெற்றியாளர்களாகவே. இம்முறையும் அந்த இடத்தை தக்கவைத்துக்கொள்ள "D" பிரிவில் வெற்றியாளர்களாக எமது அணி கடந்த ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முடி சூடினார்கள். முறையாக Softlogic finance, Airport & Aviation, Hemas Group, Ceylinco Insurance, Delmage Group, NDB bank போன்ற அணிகளை வெற்றிகொண்டு அரை இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றதுடன் David Peries Motors அணியுடன் இறுதிச்சுற்றில் Central Finance அணியை வெற்றி கொண்டு இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் தோல்வியடைந்த போதிலும் முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை பெற்றுக்கொண்டது வெற்றிகரமான ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்த தமித் பெரேரா மற்றும் நதுன் தர்ஷன ஜோடி 13 ஓவர்களில் 90 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன், பின் தமித்தின் ஆட்டமிழப்புடன் தொடர்ச்சியாக விக்கெட்டுக்கள் விழ 25 ஓவர்களில் 125 ஓட்டங்களை பெற்று தடுமாற்றத்தை சந்தித்தது. போட்டி Expolanka வசமாகும் என பார்வையாளர்கள் நினைக்கும் போது தனது நிதானமான ஆட்டத்தால் போட்டியை கொண்டு சென்ற சுலேக ரணசிங்க ஓட்டங்களை குவித்தார். மீண்டும் 32 ஆவது ஓவரில் மூன்று விக்கட்டுக்கள் விழ பார்வையாளர்கள் நம்பிக்கையை இழந்தனர். மீண்டும் அதிரடியான ஆட்டத்திற்கு திரும்பிய சுலேக ரணசிங்க 19 பந்துகளில் 32 ஓட்டங்களை பெற்றதுடன் HNBG அணி அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பெடுத்தாட வந்த Expolanka அணிக்கு HNBG யின் பந்து வீச்சாளர்களான தினூச மற்றும் சுலேக பெரும் சாவாலாக பந்து வீசியதுடன் முதல் 10 ஓவர்களுக்கு 2 விக்கட்டுக்களை பதம் பார்த்ததுடன் வெறும் 10 ஓட்டங்களை மட்டுமே வழங்கியிருந்தனர். இதனிடையே சிறப்பான களத்தடுப்பை வெளிப்படுத்தியதுடன் 02 விக்கட்டுக்களை பெற்றுக்கொள்ள அவரின் களத்தடுப்பு உதவியது. இதனிடையே 29 ஓட்டங்களுக்கு 05 விக்கட்டுக்களை இழந்தது. மிகுதி 05 விக்கட்டுக்களை இஸ்மத் மற்றும் ஜனித் பெரேரா பெற்றுக்கொண்டதுடன் Expolanka அணி 110 ஓட்டங்களுக்கு தனது அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது. இதன் அடிப்படையில் இம்முறை போட்டிகளில் D பிரிவில் வெற்றியாளர்கள் ஆனது 89 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இப்போட்டியின் வீரருக்கான விருது, சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் போட்டித்தொடரின் வீரர் விருதுகள் முறையே மெஹேமட் இஸ்மத், தினூச மற்றும் சுலேக ரணசிங்க ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.
















**ஒருவரை தோற்கடிப்பது மிகவும் இலகு, கடினமானது ஒருவரை வெற்றியடையச்செய்வதே– அப்துல்கலாம்.**



# கவிதை சாளரம்

## கடவுள் வணக்கம் செய்வோம் ஆசி பெறுவோம்



கடவுளின் அன்பை பெற என்றும் வணங்குவோம்
பெற்றோரை வணங்கி பெரியோரை மதிப்போம்
மதகுருக்களை வணங்கி ஆசி பெறுவோம்
என்றும் எங்கள் பெரியோரின் ஆசிர்வாதத்தை
பெறுவோம்
குடி மற்றும் போதையில் இருந்து விலகி
தீய செயல்களை என்றும் செய்யாமல்
செல்லும் வழியை சரியாக கண்டெடுத்து
மனதில் இறைவனை நிறுத்தி ஆசிபெறுவோம்.

– நிமல் ராஜகருன – ஹோமாகம

## உனக்காக மட்டும்...



நாட்கள் கடந்து சென்ற போதிலும்
பருவங்கள் மாறிச்சென்ற போதிலும்
உருவங்கள் மாறிச்சென்ற போதிலும்
உறவுகள் கூடிச் சென்ற போதிலும்
இதயத்தில் இடம் வெறுமனே நின்ற
போதிலும்
உனக்காக மட்டும் திறக்கும் இந்த
இதயம்

கடந்த நாட்களும் உனக்காக மட்டும்
கடந்த பருவங்கள் உனக்காக மட்டும்
கடந்த காலங்களும் உனக்காக
மட்டும்
என்றுமே நான் நிற்பேன் உனக்காக
மட்டும்

– இரும்ரன்தெனிய –
பிரதான காரியாலயம்

## அன்புள்ள மனா...



பிறந்த அனைவரும் நிச்சயம்
இறப்பர்
அது உனக்கும் எனக்கும்
பொதுவானது
இருந்தும் நாங்கள் என்றும்
நினைத்ததில்லை
நீ என்னை விட்டுச் செல்வாய்
என்று இவ்வளவு அவசரமாக என்று
அந்த கவலையை கூற முடியாது
ஏனென்றால் அந்த தாக்கம் தழும்பாய்
எங்கள்
மனதுக்குள் எங்கள் மனதுக்குள்
தயங்காதே நண்பா என்றும்
எங்களுடன்
நீ இருப்பாய் மறையா
நினைவுகளுடன்

– ஹோமாகம கிளை –

– எங்களை விட்டு 13.01.2018 பிரிந்த
மஹேஸ் லக்மால் கமகே நண்பருக்காக –



# எங்கள் சுமைகளை குறைத்துக்கொள்ள பெற்றோரின் சுதந்திரத்தை பறிப்பதை நான் விரும்புவதில்லை.

கொழும்பு நீர்கொழும்பு வீதியில் தலுவ கொடுவயை கடந்து சாந்த ஆனா பாதைக்கு சில தூரம் செல்லும் போது அங்கிருந்து ஒரு கிளை பாதை ஒன்று செல்கின்றது. அந்த பாதையில் திரும்பி சிறிது தூரம் செல்லும் போது அங்கிருக்கும் அவரது வீட்டை கண்டுபிடிப்பது பெரிய காரியமாக தெரியவில்லை. ஏனெனில் பல முறை அங்கு சென்ற பழக்கம். இரு குழந்தைகளின் பாசப்பிணைப்பின் மத்தியிலும் **HNB** கிராமின் நிறுவனத்தின் பொது முகாமையாளர் எனும் பதவியை வகித்துக்கொண்டு அதை சரியாக நிறைவேற்றும் பிரபாத் கத்ரு ஆராச்சி, இந்த விடுமுறை நாளில் தனது பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் சந்தோசமாக இருக்கும் ஒரு தருணத்தில் காணச்சென்ற எங்களை புன்சரிப்புடன் வரவேற்றார்.



இன்று வீட்டு வேலை பிரபாத் அவர்களின் துணைவி மல்சா நிஸ்ஸங்க நான்கு மாத குழந்தையை கையில் ஏந்திக்கொண்டு எங்கள் முன் வந்தார். அவர் எங்களுடன் அவரின் கடந்த காலத்தின் சில விடயங்களையும் பரிமாறிக்கொண்டார். எனது அம்மா - அப்பா தங்கொடுவ நீர்கொழும்பில் இருந்து வந்தார்கள். நான் மரியா பாடசாலையில் கல்வி கற்றேன். எனது அப்பா வியாபாரம் செய்தார். அம்மா வேலைக்கு செல்லவில்லை. நான் வணிகபிரிவிலேயே எனது உயர்தரத்தை கற்றாலும் என்னால் பல்கலைக்கழகத்திற்கு செல்லமுடியவில்லை. கல்வியை போலவே விளையாட்டிலும் எனக்கு நாட்டம் அதிகம் என்பதால் அதிலும் பல வெற்றிகளை என்னால் பெற முடிந்துள்ளது. பாடசாலை நாட்களுக்கு பின் பல உயர்கல்வி கற்கைகளை மேற்கொண்டதுடன் அப்பாவின் வியாபாரத்திற்கும் உதவி செய்தேன்.

**எப்படி உங்கள் இருவரின் சந்திப்பு ஏற்பட்டது…**

அது மிகவும் சுவாரஸ்யமானது. ஏனெனில் எனக்கு நாற்பதுக்கும் மேல் கோரிக்கைகள் வந்த போதும் அவற்றில் பெரிதாக எனக்கு விருப்பம் இல்லாததால் அவை அப்படியே இல்லாமல் போய்விட்டது. அதில் தமிர எனும் ஒரு சகோதரரால் தான் எனக்கு பிரபாத் பற்றி தெரிய வந்தது. அவர் தமிருத் உடன் வந்தார். நாங்கள் பேசினோம். அதன் பின் அவர் என்னுடன் தொலைபேசியில் பேசினார். அந்த எல்லா தருணங்களிலும் நாங்கள் நெருக்கமானோம் என்றால் அது சரி. 2015 இல் திருமணம் முடித்தோம். இன்று நாங்கள் இரு குழந்தைகளுக்கு பெற்றோர்களாக இருக்கின்றோம். மகன் டோனித் 1 வயது பதினொரு மாதங்கள், மகள் ஒமேலிக்கு நான்கு மாதங்கள் மகனும் மகளும் அருகிலே பிறந்ததால் அவர்களுடனேயே அதிக நேரத்தை செலவிட வேண்டியுள்ளது. வீட்டை பராமரிப்பது கூட பிரபாத் தான். அவர் வீடு தொடர்பில் அதிக கவனம் செலுத்துவார்.



**தொழிலையும் வீட்டையும் எப்படி அவர் சமநிலையில் கருத்தில் கொள்கின்றார்.**

இலங்கையின் பிரதான நிதி நிறுவனங்களில் ஒன்றில் அதிகாரி ஒருவருக்கு இருக்கும் வேலை தொடர்பில் நான் அறிவேன். கிழமையில் மூன்று நான்கு நாட்களுக்கு வெளிகிளைகளுக்கு செல்ல வேண்டிய நிலையே. சில வேலைகளில் சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும் வேலை செய்ய வேண்டும். அவ்வாறான நேரங்களில் அவரின் நிலையை புரிந்து விருப்பம் இல்லாத போதும் அதற்கு இணங்க வேண்டி இருக்கின்றது. இருந்தாலும் சனி ஞாயிறுகளில் அவர் எம்முடன் நேரத்தை கழிப்பதையே நான் விரும்புகின்றேன்.

**பிள்ளைகளின், கணவர்களின் வேலையுடன் வாழ்க்கையை எவ்வாறு வாழுகின்றீர்கள்…**

தாய் ஒருவரின் மனைவியின் நாள் ஒன்று எப்படி கழியும் என்று அவர் இவ்வாறு கூறினார்…

நான் அதிகம் புத்தகம் வாசிக்கும் ஒருவர் அதேபோல் தான் சங்கீதமும். காகிதங்களால் செய்யும் வேலைகளும் என்னால் செய்ய முடியும். ஆனால் அதற்கு நிறைய நேரம் தேவைப்படுகின்றது. வீட்டிலிருந்தே செய்யக்கூடிய பல சுய தொழில்கள் இருக்கின்றது. ஆனால் அவற்றை செய்ய எனக்கு இஷ்டமில்லை. ஏனெனின் குழந்தைகள் என் பராமரிப்பில் வளர வேண்டும் என நினைக்கின்றேன். வயதானதும் அதை பற்றி நினைத்துகொண்டிருக்காமல் அவர்களை தாத்தா அல்லது பாட்டியிடம் விட்டுச்செல்வது என்பது சரியில்லாத காரியம் என்றே நான் நினைக்கின்றேன். ஏனென்றால் எனது தாய் தந்தைக்கு இப்போது வயதாகிவிட்டது. அவர்கள் எங்களை கவனமாக பார்த்துக்கொண்டார்கள் அவர்கள் மீது எப்பொழுதும் அந்த அன்பு இருக்கின்றது. அதனால் நாங்கள் அப்படியே எங்கள் பிள்ளைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என நினைக்கின்றேன்.

ஒமேலி மகள் பிரபாத் இன் கைகளில் நன்றாக உறக்கம். மகனும் அம்மாவின் கைகளில் வந்தவர்களை சிறப்பாக வரவேற்றது மட்டுமல்லாமல் கவனித்தும் கொண்டார். இந்த பாசப்பிணைப்பு மிக்க இந்த இல்லத்திலிருந்து விடைபெறும் நேரம் நேரமாகிற்று. நல்ல நினைவுகளுடன் நாம் செல்லும் நேரம்.



ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டிஆராச்சி

# Training Calendar



தலைமைத்துவம், முகாமைத்துவம் மற்றும் அணியாக செயற்படல் போன்ற விடயங்களை கலந்துரையாடும் கருத்தரங்கு கண்டி பிரதேச உறுப்பினர்களுக்காக 2018.02.24 ஆம் திகதி மு.ப 09.00 தொடக்கம் நாள் முழுவதும் திகன விலேஜ் இல் இடம்பெற்றது. இது பயிற்சி பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், பயிற்சி பிரிவின் பிரதானி அனுர உடவத்த மற்றும் பயிற்சி தொடர்பு முகாமையாளர் சஞ்சய பண்டார மற்றும் நுவன் குமார பண்டார ஆகியோரால் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

பண உபயோகம், சேமிப்பை வளர்த்தல் தொடர்பான சிறப்பான ஒன்று கூடல் நாவலப்பிடிய கிளை மத்திய நிலையத்தில் தலைவர்களுக்காக 2018.01.25 மு.ப 09.00 ரொஸானா மஹால் உற்சவ மண்டபத்தில் பயிற்சி பிரிவின் தலைவர் அனுர உடவத்த அவர்களால் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.





நாவலப்பிடிய கிளை காரியால மண்டப உறுப்பினர் களுக்காக தொழில்சார் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை வளர்ச்சி தொடர்பான வேலைத்திட்டம் 2018.01.24 அன்று மாலை கிளை வளாகத்தில் இடம் பெற்றது. பயிற்சி பிரிவின் தலைவர் அனுர உடவத்த அவர்களால் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.




உங்களின் பலவீனம் உங்களின் நட்பு என்றால் இந்த உலகத்தில் உள்ள சக்தி மிக்கவர் நீங்களே – ஆப்ரகாம் லிங்கன்.

# கடன் தொகை ஒன்றை வழங்கும் முன் உங்களால் நிச்சயம் அவதானிக்க வேண்டிய விடயங்கள் (Credit Condition)

நுண் நிதிகளை வழங்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் பற்றி இம்முறை எமது கவனத்தை செலுத்தவுள்ளோம். வியாபாரம் ஒன்றிற்காக கடன் தொகை கோரப்படும் போது அதற்காக வழங்கப்படும் கடன்களின் நிபந்தனைகள் தொடர்பிலும், கடன் வழங்கும் நிறுவனத்தினால் கடன் பெறுபவருக்கு எவ்விதத்திலும் பாதிப்புகள் ஏற்படாத வகையிலும் எமது கவனத்தை செலுத்த வேண்டிய பிரிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவது கடன் வழங்கும் பொறுப்பதிகாரிக்கு அது மிகவும் முக்கியம் என்பதனாலேயே ஆகும்.



வியாபாரம் ஒன்றிற்காக கடன் ஒன்றை வழங்கும் போது கவனிக்க வேண்டிய கடன் நிபந்தனைககள் தொடர்பில் அறிந்து கொள்வதென்பது கடினமான காரியம் ஒன்றாகும். அதாவது கடன் பெறும் வியாபாரத்தின் தன்மை மற்றும் கடன் பெறுபவரின் சமுதாய நிலை என அனைத்தையும் ஆராய வேண்டியது இதன் முக்கிய நிலைகளாகும். பல நுண் நிதி நிறுவனங்களில் கடன் நிபந்தனைகள் ஏதேனும் ஒரு தரத்திற்கு கொண்டுவர கடந்த காலங்களில் முயற்சித்த போதும் நாம் மேற்கூறிய சில விடயங்களால் அது முடியாமல் போனது. அதனால் கடன் பொறுப்பதிகாரிக்கான பொறுப்புகள் அதிகரித்ததுடன் அவர்களுக்கான அவதானமும் அதிகரித்தது. கடன் நிபந்தனைகள் பிரதான நான்கு காரணங்களால் எமக்கு விசாரனைக்கு உட்படுத்த முடியும்

1. கடன் தொகை எவ்வளவு அந்த கடனை பெற்றுக்கொள்வதற்கான காரணம் என்ன மற்றும் மீள் செலுத்தக்கூடிய கால எல்லை
2. கடனை மீள செலுத்தும் திட்டம்
3. கடன் பாதுகாப்பு (பிணைகள் போன்றன)
4. பெற்றுக்கொடுக்கும் கடனுக்கான செலவீனங்கள்

கடன் நிபந்தனைகளை நடைமுறைபடுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் நாங்கள் மேலே குறிப்பிட்டோம். அதில் முதல் காரணம் தொடர்பில் விரிவாக தற்போது கலந்துரையாடுவோம்.

கடன் தொகை ஒன்றை பெற்றுக்கொடுக்கும் போது எங்களுக்கு ஏற்படும் முக்கிய பிரச்சினையாக அமைவது கடன் பெறுபவரின் பணப்புலக்கம் (Cash [illegible] எவ்வளவு இருக்கும் என்பது தொடர்பிலேயே ஆகும். இது தொடர்பில் கடனின் தொகை மற்றும் கடனை திரும்பச்செலுத்த எடுக்கும் காலம் எனும் இரு முக்கிய காரணங்களை விரிவாக ஆராய வேண்டும். அது கடனை பெறுபவரின் தேவை மற்றும் மீள செலுத்தும் தன்மை தொடர்பிலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

கடன் தொகை, கடன் கோருபவரின் வியாபாரத்தின் தன்மை மற்றும் அவரின் சொத்துக்கள் அதன் தன்மை போன்ற விடயங்களை ஆராய்வதுடன், அந்த வியாபாரத்தினால் ஈட்டக்கூடிய இலாபம் தொடர்பிலும் கவனம் கொண்டே அந்த தொகை வழங்கப்படும். இது தொடர்பில் கடன் வழங்கும் அதிகாரியின் அவதானம் செலுத்தப்பட வேண்டியது முக்கிய விடயமாகும். அதாவது கடன் பெறுபவர் கடனை செலுத்தமுடியாமல் கஷ்டப்படாதவாறு செயற்படுத்தலாகும்.

கடன் தொகையை பெற்றுக்கொடுக்கும் போது கடன் கோருபவரின் பணப்புழக்கம் தொடர்பில் நன்கு ஆராய்ந்து அவருக்கு பொருத்தமான அளவு கடனை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு கடன் வழங்கும் அதிகாரியின் முக்கிய பொறுப்பாகும். அதாவது கடன் பெற்றுக்கொண்டவரால் கடனை மீளச்செலுத்தும் போது ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்க்கவும் கடன் தொகையை செலுத்த முடியாவிட்டாலும் அதற்காக வேறு வழிகளிலாவது அதை நிவர்த்தி செய்வதற்கான வழிகளை கண்டறிதல் கடன் வழங்கும் அதிகாரியின் பொறுப்பாகும்.

அவசர தேவைக்காக கடனை வழங்கி வியாபாரம் சரியாக செய்ய முடியாத கடனை செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் கடன் பெற்றவருடன் கலந்துரையாடி வியாபாரம் தொடர்பில் கடன் பெறுனருக்கு அறிவுறுத்தி சிறந்த யோசனைகளை வழங்கி கடனை பெற்றுக்கொள்ள எத்தணித்தல் வரவேற்கத்தக்கது. அத்துடன் வியாபாரத்தை வளர்த்துக்கொள்ள செய்யக்கூடிய செயற்பாடுகள் எவை, வியாபாரத்தை செய்து கொண்டு செல்லும் போது ஏற்படக்கூடிய நட்டங்கள் எவை, தற்போது அந்த வியாபாரத்தின் நிலை, அந்த கடன் தொகையை கொண்டு கடன் பெற்றவர் வேறு எதற்கும் உபயோகிக்கின்றாரா? என அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கடன் வழங்கிய அதிகாரி விழிப்புடன் செயற்பட வேண்டும்.

கடன் பெறுபவருக்கு தமது வியாபாரம் தொடர்பில் சிறந்த ஒரு அவதானம் இல்லாத போது கடன் தொகையை வியாபாரத்திற்காக உபயோகிக்காத சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. விசேடமாக வியாபாரம் தொடர்பில் எவ்வித அறிவும் இல்லாமல் கடன் தொகையை பெற்று அதை முதலீடு செய்யும் பொழுது அம்முதலீடு அந்த வியாபாரத்திற்கு போதாத நிலையும் ஏற்படும். இது போன்ற சந்தர்ப்பங்களில் கடன் வழங்கும் அதிகாரியின் அறிவுரைகளை பெறுவது முக்கிய விடயமாகும்.

வியாபாரம் ஒன்றிற்காக கடனை பெறும் போது கடன் வழங்கும் அதிகாரி ஒரு சூத்திரத்தை உபயோகிப்பார். அதாவது பணப்புலக்கம் ரூபா. 30.000 ஆக இருக்கும் ஒருவருக்கு 12 மாதங்களில் செலுத்தி முடிக்கக்கூடிய வகையில் 20% வட்டியில் கடன் தொகையை பெற்றுக்கொடுப்பதுடன் இவ்வாறான தருணங்களில் அந்த சூத்திரத்தை உபயோகித்து ஒருவருக்கு வழங்கக்கூடிய கடன் தொகை தொடர்பில் எம்மால் கணிப்பிட முடியும். அது இவ்வாறே

.5 x மாதாந்த பணபுரள்வு x தவணைகளின் எண்ணிக்கை / 1 + வட்டி .5 X 30000 x 12/1 + .2 = 150000

இந்த முறையில் பார்க்கும் போது மேல் கோரிய கடன் பெறுனருக்கு வழங்கக்கூடிய கடனின் தொகை 150,000 ஆகும். கடன் கோருபவரின் தொகை அவர் வியாபாரத்தில் முதலிடும் தொகைக்கு அதிகமாக இருக்கின்றதா என்பது தொடர்பிலும் கடன் வழங்கும் அதிகாரி அவதானிக்க வேண்டும்.

மிகுதி பகுதி அடுத்த இதழில்...



கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது.




என்னால் முடியாது என்று சொன்னவர்களுக்கு நன்றி கூற வேண்டும் நான் அனைத்தையும் செய்ய முடிந்தவை அவர்களாளேயே – எல்பர்ட் அமின்ஸ்டீன்.




# HNB Gran

## “அறிவினால் வெல்லும் பய


மேனக லக்மால் பணப்பரிசு மற்றும் 750,000 அவசர விபத்து காப்புறுதி மற்றும் தொலைபேசியை பெற்றுக்கொள்ளல்


கேள்விக்கு பதில் வழங்கிய உசான்


லக்மால் மற்றும் IQ Master மேடையை மேலும் சிறப்பாக்கிய தருணம்

இலங்கை முழுவதும் பரந்திருக்கும் **HNB** கிராமின் ஊழியர்களின் அறிவை பரிட்சிக்கும் **HNB** கிராமின் **IQ Master** பகுதி 02 இன் இறுதிப்போட்டி மிகவும் விமர்சையாக நடைபெற்றது. மிரிஹான ரூபல்ஸ் ரெசிடன்ஸ் இல் இடம் பெற்ற இறுதிப்போட்டிக்கு **HNB** கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி பீ.எம்.டீ.சீ பிரபாத் அவர்களின் தலைமையில் இடம் பெற்றதுடன் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டி இரண்டாவது முறையாக 2018 இல் 650 போட்டியாளர்களின் பங்குபற்றலில் இடம்பெற்றது. முதல் இரண்டு சுற்றுகளில் இருந்து இறுதி சுற்றுக்கு 16 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அதில் **Fast the Finger First** போட்டியின் மூலம் இறுதி சுற்றுக்கு 5 பேர் தெரிவாகினர்.

இதனடிப்படையில் **HNB** கிராமின் **IQ Master** போட்டியின் இறுதிப்போட்டியின் வெற்றியாளராக குருநாகலை கிளையின் கசுன் புத்திக பெற்றுக்கொண்டார். 10 பதில்களுக்கு விடையளிப்பவர்களுக்கு வழங்கப்படும் **IQ Master** கிண்ணம் கசுனுக்கு கிடைக்காத போதிலும் 8 விடைகளை சரியாக கூறியதால் 2 மில்லியன் அவசர விபத்து காப்புறுதி மற்றும் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான ஆயுள் காப்புறுதி செலிங்கோ நிறுவனத்தால் அனுசரனை வழங்கப்பட்ட பரிசை பெற புத்திக அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கும் மேலாக 50,000 பெறுமதியான பணப்பரிசு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா அல்லது அந்த பெறுமதிக்கு பொருத்தமான ஒரு கற்கைநெறிக்கான கட்டணம் என இப்பரிசில்களையும் அவர் வென்றார். இறுதி சுற்றுக்கு தெரிவான மற்றைய போட்டியாளர்களுக்கு ரூபா 75,000 பெறுமதியான அவசர விபத்துக்காப்புறுதி செலிங்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டதுடன், ஸ்ரீ லங்கா டெலிகொம்மினால் வழங்கப்பட்ட தொலைபேசிகளையும் பெற்றுக்கொண்டனர்

இத்துடன் இறுதிச்சுற்றுக்காக தெரிவான 16 போட்டியாளர்களுக்கும் செலிங்கோ நிறுவனத்தினால் ஒரு லட்சம் பெறுமதியான அவசர விபத்து காப்புறுதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இரண்டாவது சுற்றில் அதிக புள்ளிகளை பெற்ற 16 போட்டியாளர்களுக்கு வாழ்த்துக்கள் வழங்கப்பட்டமை முக்கிய நிகழ்வாகும்.


அனுருத்த அவரின் மகள் ஹசினியுடன் ஒரு பாடலை பாடும் போது


போட்டிகளின் போது


இம்முறை இப்போட்டியின் வெற்றியாளர் யார்


கசுன் புத்திக ரூபா.50,000 பணப்பரிசு மற்றும் 750,0000 அவசர விபத்து காப்புறுதி மற்றும் தொலைபேசியை அரங்கல அவர்களினால் பெற்றுக்கொண்ட அந்த சந்தர்ப்பத்தில்


மலிந்த அயேசான் பணப்பரிசு மற்றும் 750,000 பெறுமதியான அவசர விபத்து மற்றும் தொலைபேசியை பெற்றுக்கொண்ட போது


இசார மதுசங்க 750,000 பெறுமதியான அவசர விபத்து மற்றும் தொலைபேசியை பெற்றுக்கொண்ட போது

வெற்றிக்கு உதவுவது புத்தி மட்டுமல்ல முயற்சியும் தான் – அமெரிக்க எழுத்தாளர் வுசால்ஸ் வென்ட.

# neen IQ Master
## ணம் உச்ச நிலையை அடைந்த நேரம்"

**HNB Grameen IQ Master** போட்டிக்கு நிகராக **Face Book** உபயோகித்து **HNB** கிராமின் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் இந்த போட்டிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு பரிசுகள் வழங்கியமை இப்போட்டியின் போது இடம்பெற்றது.

**IQ Master** போட்டிக்கு நிகராக 2017 ஆம் ஆண்டு (க.பொ.த) சா/த பரீட்சையில் வணிக பிரிவில் தோற்றி அகில இலங்கை மட்டத்தில் 13 ஆவது இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 04 ஆவது இடத்தையும், பெற்றுக்கொண்ட **HNB** ஊழியர் குழாத்தின் அங்கத்தவர் அனுருத்த பொனடனம்பெரும அவரின் மகளான ஹசின் நயனதாரா பொன்னப்பெருமவுக்கு உயர்கல்விக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் அய்கொண்டெக்ட்ஸ் கொண்டென்ட் கன்வர்ஜன்ஸ் தனி நிறுவனம் மற்றும் டெலிகொம் நிறுவனமும் இணைந்து **E-learning** செயற்திட்டமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**HNB Grameen IQ Master** போட்டியை ஒழுங்கு செய்யும் சேவையில் ஈடுபட்ட **HNB** கிராமின் பினான்ஸ் பிரதி பொதுமுகாமையாளர் (மனிதவள மற்றும் நிர்வாக) ருவன் பிரனாந்து அவர்கள் கருத்து தெரிவிக்கும் போது, நாடு பூராகவும் பரந்திருக்கும் **HNB** கிராமின் ஊழியர்களின் அறிவை பரிசோப்பதோடு, எமது ஊழியர்களின் தொழிற்சூழல் மற்றும் வீட்டிச்சூழலை சரியாக பேணுவதற்கும் ஒரு நிலையை இந்த போட்டியின் மூலம் பெற்றுக்கொடுக்கவும், வருடாந்தம்

12 ஆம் பக்கம் பார்க்க...



திரைக்கு பின் நின்று உதவிய கரங்கள்


திலின லக்மால் பணப்பரிசு மற்றும் 750,0000 அவசர விபத்து காப்புறுதி மற்றும் தொலைபேசியை பெற்றுக்கொண்ட போது




கேள்வி ஒன்றிற்காக Call a friend சந்தர்ப்பத்தில் உதவியை கோரி நிற்கும் பிரியந்த




## Our Partners

HNB GRAMEEN IQ MASTER

Sri Lanka Telecom

HERCULEAN SECURITY

CEYLINCO VIP ON THE SPOT

CEYLINCO LIFE
A Relationship For Life

Kumudu Electricals

SINGER® Trusted Excellence

ARJUNA GRAPHICS(PVT) LIMITED

JKOA

# Promotion and Re designation 2018

## Promotion

| | | |
|---|---|---|
| M K R Shamil Kumara | Head Office | Senior Manager - Leasing |
| K G H Prasad Kulathilaka | Head Office | Chief Manager / Head Of Corporate Planning |
| I L Upul Priyashantha | Ratnapura | Senior Branch Manager |
| U A K A Akalanka De Silva | Ampara | Senior Branch Manager |
| T P Mendis Silva | Negombo | Senior Branch Manager |
| W M Asanka Wijesinhe | Padaviya | Senior Branch Manager |
| G M Indika Pathmakumara | Bandarawela | Manager - Service Centre |
| M A Prageeth Kumarathunge | Tissamaharamaya | Manager - Service Centre |
| S A H Niranjan Senarath | Rikillagaskada | Manager - Service Centre |
| W A D D Chamara Wijesooriya | Pitigala | Manager - Service Centre |
| T L Madawa Sathyajith | Kekirawa | Manager - Service Centre |
| D D A Nuwan Sanjeewa | Galenbidunuwewa | Manager - Service Centre |
| G N S Yapa Kulathunge | Hatton | Manager - Service Centre |
| W P M De Silva | Dehiattakandiya | Manager - Service Centre |
| K S Kumara Karunarathna | Nochchiyagama | Manager - Service Centre |
| C Edvin Latheef | Mallavi | Manager - Service Centre |
| J A Ruwan Kumara | Nedunkerny | Manager - Service Centre |
| Dushantha Gamage | Head Office | Manager - Sales & Recoveries |
| H Anuruddha Ponnamperuma | Head Office | Manager - Liability Sales |
| P R R Shantha Dharmapriya | Head Office | Manager - Leasing Recoveries |
| Shanmuganathan Mayuran | Head Office | Manager - Finance & Compliance (Regional) |
| G D C Lalinda Kumara | Head Office | Manager - Credit Administration |
| W M P Eranda Weerasingha | Head Office | Manager - Branch Network |
| H P C Buddhika Harischandra | Head Office | Data Base Administrator |
| Kandasami Prabakaran | Walapane | Manager - Service Centre |
| H A U Lahiru Kumara | Head Office | Assistant Manager - Recoveries |
| Poobalasingam Roobadharsan | Head Office | Assistant Manager - Quality Assurance |
| S Sanjeewa Wijendra | Head Office | Assistant Manager - Liability Sales |
| G G M S Madhusanka Roopasinghe | Head Office | Assistant Manager - Liability Sales |
| C Tharanga Peiris | Head Office | Assistant Manager - Liability Sales |
| R D Sooriyaarachchi Amarasekara | Head Office | Assistant Manager - Liability Sales |
| D S Maduranga Fernando | Head Office | Assistant Manager - Liability Sales |
| H Dishan Saminda | Head Office | Assistant Manager - Liability Sales |
| Ganesh Mahesh | Head Office | Assistant Manager - Liability Sales |
| N S Vishva Perera | Head Office | Assistant Manager - Liability Sales |
| H Madukapriya Gamage | Head Office | Assistant Manager - Liability Sales |
| R Buddika Palihakkara | Head Office | Assistant Accountant |
| P Lasantha Rajapaksha | Head Office | Senior ICT Executive - Regional |
| Thillainathan Senthuran | Head Office | Senior ICT Executive - Regional |
| Yoganathen Suthersan | Kalmunai / | Senior Executive - Accounts & Administration (Service Centre) |
| Nadeshamoorthy Uruthirakumar | Batticaloa | Manager - Micro Finance |
| Subramaniam Gunasegaram | Batticaloa | Manager - Micro Finance |
| J A Saman Hemajith | Puttalam | Assistant Manager - Micro Finance |
| K K D T Udaya Kumara | Ampara | Assistant Manager - Micro Finance |
| M A Chathukka Simihira | Pitigala | Assistant Manager - Micro Finance |
| Kunarasa Prasanth | Kalmunai | Assistant Manager - Micro Finance |
| Thavarasa Raviraj | Nelliyady | Assistant Manager - Micro Finance |
| Sivapathasuntharam Vinothan | Nelliyady | Assistant Manager - Micro Finance |
| Nagalingam Priyatharshan | Kalmunai | Assistant Manager - Micro Finance |
| Subramaniyam Vijayakumar | Hatton | Assistant Manager - Accounts & Administration |
| W G Madhushaka Fernando | Head Office | System Executive - Applications |
| G D Nayana Darshana | Head Office | System Executive - Applications |
| Narayanapillai Sivaruban | Head Office | Senior System Executive - Quality Assurance |
| G M C Pushapa Kumara | Welimada | Senior Marketing Executive - Savings |
| P D Madushan Perera | City | Senior Marketing Executive - Leasing |
| W S Indika Wijayarathna | Anuradhapura | Senior Marketing Executive - Leasing |
| K M Nimmika Perera | Head Office | Senior Executive- ICT |
| D G C Keerthi Bandara | Head Office | Senior Executive - Small Scale Enterprises |
| M U Sandunika Dharmawardana | Head Office | Senior Executive - Liability Products |
| K Akila Chathuranga | Head Office | Senior Executive - Leasing Operations |
| A M S Chandani Adhikari | Head Office | Senior Executive - Human Resources |
| M N Amalka Cooray | Head Office | Senior Executive - Human Resources |
| S Maheel Munasinghe | Kurunegala | Senior Executive |
| P A S Kumara Abeyrathna | Nikaweratiya | Senior Executive |
| H Pethum Chinthaka | Galle | Senior Executive |
| Thiyagenthiran Jeyavinoothan | Trincomalee | Senior Executive |
| T I Chathuranga Ariyadasa | Ratnapura | Senior Executive |
| Ravindran Saththeyarajah | Batticaloa | Senior Executive |
| L Thayalan Sowmiyan | Trincomalee | Senior Executive |
| A M C R Bandara Aththanayaka | Nawalapitiya | Senior Executive |
| M P Rusiru Premalal | Kantale | Senior Executive |
| S N Dilip Chandana | Tissamaharamaya | Senior Credit Executive - Small Scale Enterprises |
| M S Mevin Deluxion | Trincomale | Senior Credit Executive - Small Scale Enterprises |
| D Titus Wickramasinghe | Chilaw | Senior Credit Executive - Small Scale Enterprises |
| L Dilshan Wijethunga | Matara | Senior Credit Executive - Micro Finance |
| W M G Ravindra Jayamal | Nawalapitiya | Senior Credit Executive - Micro Finance |
| E G Prabath Madusanka | Matara | Senior Credit Executive - Micro Finance |
| S Prasad Buddika | Puttalam | Senior Credit Executive - Micro Finance |
| Krishnakumaran Ravesan | Kantale | Senior Credit Executive - Micro Finance |
| D Jerad Laxman | Puttalam | Senior Credit Executive - Micro Finance |
| M Radeep Rohitha | Kantale | Senior Credit Executive - Micro Finance |
| Pathmanathan Thanushan | Kalmunai | Senior Credit Executive - Micro Finance |
| H L Nuwan Priyadarshana | Matara | Senior Credit Executive - Micro Finance |
| Jabeer Suman | Trincomalee | Senior Credit Executive - Micro Finance |
| H N R U Janesh Chamikara | Galle | Senior Credit Executive - Micro Finance |
| H T Lahiru Chathuranga | Matara | Senior Credit Executive - Micro Finance |
| I P Nuwan Sameera | Chilaw | Senior Credit Executive - Micro Finance |
| S K Sarath Kumar | Monaragala | Senior Credit Executive - Micro Finance |
| D J Prashantha Perera | Kaduwela | Senior Credit Executive - Micro Finance |
| J A Shan Malsha | Negombo | Senior Credit Executive - Micro Finance |
| Santhirakumaran Piratheepan | Jaffna | Senior Credit Executive - Micro Finance |
| A L Charles Darshan | Norochchole | Senior Credit Executive - Micro Finance |
| Selvakkathiramalai Yalakan | Nelliyady | Senior Credit Executive - Micro Finance |
| U S Madusanka Samarathunga | Kantale | Senior Credit Executive - Micro Finance |
| R P I S Ajith Rohana | Kaduwela | Senior Credit Executive - Micro Finance |
| Srithevakanthan Paveenthiran | Jaffna | Senior Credit Executive - Micro Finance |
| Ramathas Aravinthan | Vavuniya | Senior Credit Executive - Micro Finance |
| Anantharajah Loharajh | Trincomalee | Senior Credit Executive - Micro Finance |
| R S Daminda Rathnayaka | Padaviya | Senior Credit Executive - Micro Finance |
| H A M Sujith Jayamal | Kantale | Senior Credit Executive - Micro Finance |
| H Salinda Liyanage | Galenbidunuwewa | - Senior Credit Executive - Micro Finance |
| Sundaramoorthy Manoj | Kalmunai | Senior Credit Executive - Micro Finance |
| Kanthasamy Thanusan | Jaffna | Senior Credit Executive - Micro Finance |
| T A A Kumara Asanka | Kaduwela | Senior Credit Executive - Micro Finance |
| S Ajith Siriwardana | Pothuvil | Senior Credit Executive - Micro Finance |
| Chandrabose Ashokkumar | Padaviya | Senior Credit Executive - Micro Finance |
| Somasuntharam Niranjan | Vavuniya | Senior Credit Executive - Micro Finance |
| Madasamy Navachchandran | Mannar | Marketing Executive - Savings |
| I H Vinod Chathuranga | Mathugama | Marketing Executive - Savings |
| P P Sampath Fernando | Puttalam | Marketing Executive - Savings |
| P Suresh Chamara | Kantale | Marketing Executive - Savings |
| H M S Jayashan Bandara | Kaduwela | Marketing Executive - Savings |
| V G M Lakmal Gamage | Anuradhapura | Marketing Executive - Savings |
| A V Kanishka De Silva | Horana | Marketing Executive - Savings |
| Kirupaharan Jayashanth | Batticaloa | Marketing Executive - Savings |
| K H Rasika Prasad | Kantale | Marketing Executive - Leasing |
| M L Chathuranga Frenando | Horana | Marketing Executive - Leasing |
| J H C Kasun Tissera | City | Marketing Executive - Leasing |
| Sinniah Lahini | Head Office | Junior Executive - Human Resources |
| C Sampath Samarappuli | Head Office | Junior Executive - Human Resources |
| T Darshana Rathnayaka | Head Office | Executive - Payments |
| P G W Sandakelum Perera | Head Office | Executive - Payments |
| T Sudesh Rajapaksha | Head Office | Executive - Liability Products Services |
| D Chathurika Jayawickrama | Head Office | Executive - Liability Products Services |
| W T T Kalpana Fernando | Head Office | Executive - Leasing Operations |
| W G G Prabath Maduwantha | Head Office | Executive - Internal Control Assurance |
| H U Sampath Kulasooriya | Head Office | Executive - Internal Control Assurance |
| G Chathurangika Uduwella | Head Office | Executive - Human Resources |
| K A D D D Ridmal Kahandawaarachchi | Head Office | Executive - Human Resources |
| A Atputhamani Jestin | Kilinochchi | Executive |
| U G C S Udaya Kumara | Ampara | Executive |
| Sivanathan Kajenthiran | Nelliyady | Executive |
| M A V Madushantha Aththanayake | Nuwara Eliya | Executive |
| Thangeswaran Rajitharan | Batticaloa | Executive |
| P G Arunalal Wijewardena | Nawalapitiya | Executive |
| K A Chamith Yasintha | Mathugama | Executive |
| S A Samantha Lakmal | Chilaw | Credit Executive - Small Medium Enterprises |
| Chandrasegaran Krishanthan | Walapane | Credit Executive - Micro Finance |
| W A Niluka Madushanka | Padaviya | Credit Executive - Micro Finance |
| W G S Priyadarshana Perera | Nawalapitiya | Credit Executive - Micro Finance |
| A M Mohamed Safras | Pothuvil | Credit Executive - Micro Finance |
| K B Rohan Buddhika | Trincomalee | Credit Executive - Micro Finance |
| G Atputharasa Amalraj | Mullativu | Credit Executive - Micro Finance |
| W H D Madusanka Vijesiri | Puttalam | Credit Executive - Micro Finance |
| K U Hashan Peiris | Negombo | Credit Executive - Micro Finance |
| Packiyanathan Sapesan | Batticaloa | Credit Executive - Micro Finance |
| T D R Sampath Dananjaya | Balangoda | Credit Executive - Micro Finance |
| B W S Udayanga Chandrasiri | Pitigala | Credit Executive - Micro Finance |
| Nallaiya Sulojan | Batticaloa | Credit Executive - Micro Finance |
| Megarajah Liwarsanan | Batticaloa | Credit Executive - Micro Finance |
| Y Dilruk Wickramasinghe | City | Credit Executive - Micro Finance |
| K L A Widuranga Perera | Puttalam | Credit Executive - Micro Finance |
| L P Hasitha Sandaruvan | Trincomalee | Credit Executive - Micro Finance |
| B P G N Nayanajith Lakmal | Polonnaruwa | Credit Executive - Micro Finance |
| Parameswaran Kogulan | Nelliyady | Credit Executive - Micro Finance |
